செய்தி வெளியீடு எண்.26 / 2021 நாள் : 26.10.2021

**<u>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்</u>**

வால்டாக்ஸ் ரோடு யானை கவுனி பாலம் அருகில்
பிரதான குழாய்கள் மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்வதால்
பகுதி–5–க்குட்பட்ட பகுதிகளில் 27.10.2021 காலை 9 மணி முதல்
மறுநாள் 28.10.2021 காலை 6 மணி வரை குடிநீர் விநியோகம் நிறுத்தம்.
<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

எதிர்வரும் பருவமழையை முன்னிட்டு நெடுஞ்சாலைத் துறையால், வால்டாக்ஸ் ரோடு யானை கவுனி பாலம் அருகில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணி நடைபெறும் இடத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் சென்னை குடிநீர் வாரியத்தால் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளது. இப்பணிகள் 27.10.2021 காலை 9 மணி முதல் மறுநாள் (28.10.2021) காலை 6 மணி வரை நடைபெறவுள்ளதால், பகுதி–5க்குட்பட்ட எழும்பூர், புரசைவாக்கம், சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, சூளை, பார்க் டவுன், ஜார்ஜ் டவுன், சௌகார்பேட்டை, வேப்பேரி மற்றும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் குழாய் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

இதனால் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசரத் தேவைக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்காணும் அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

பகுதி பொறியாளர் – 5 (இராயபுரம்) கைபேசி எண்.8144930905

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்.
சென்னை குடிநீர் வாரியம்